SRI S. LAZAR : செஷன்ஸ் கோர்ட்டுகளிலே வசதியில்லாத குற்றவாளிகளுக்கு சர்க்காரே வக்கீல் வைத்துக் கொடுக்கிறது. அவர்களிலே பெரும்பாலோர் அனுபவமும் திறமையும் இல்லாது இருப்பதாக பொதுவான அபிப்பிராயம் இருக்கிறது. ஆதலால் நல்ல அனுபவம் மிகுந்த வக்கீல்களை அமைக்க அரசாங்கம் முன் வருவார்களா?

THR HON. SRI M. BHAKTAVATSALAM : யாருக்கு அனுபவம் இருக்கிறது, யாருக்கு இல்லை என்று அதிகாரிகளைப் பற்றி சொல்லுவது சரி அல்ல. வழக்கறிஞர்களிலே ஜூனியர், சீனியர் என்று இருக்கிறார்கள். அவர்கள்தான் வாதாட வேண்டும் என்று விதி இருக்கிறது.

SRI A. GOVINDASAMY : திரு. ஜகந்நாதன் அவர்கள் கேட்ட கேள்விக்கு கனம் அமைச்சர் அளித்த பதிலிலிருந்து இம்மாதிரியான ஒரு சலுகை இருக்கிறது என்று கலெக்டர் ஒரு அறிக்கை மூலம் தெரிவித்து விட்டால், எதிர்ப்பார்த்த விதத்தில் சிக்கிக் கொண்டால் அதிலிருந்து தப்பித்துக் கொள்ள வழியிருக்காது என்று பொது மக்களுக்கு சொல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஹரிஜனங்களுக்கும் ஏழைகளுக்கும் சலுகை இருப்பதைத் தெரியப்படுத்த அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு முன் எல்லோருக்கும் தெரியாது. தெரியும்படி செய்யலாம்.

Revenue Budget for 1957–58.

* 52 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state the financial assistance the Government are to get from the Centre to meet the deficit in the revenue budget for 1957–58?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government are not at present getting any financial assistance from the Government of India specifically to meet the deficit in the Revenue Account in 1957–58.

SRI N. K. PALANISAMI : ரெயில்வே கட்டணத்திலிருந்தும், போஸ்டல் வருமானத்திலிருந்தும் மத்திய சர்க்கார் நமக்கு ஒரு விகிதாசாரம் ஒதுக்கியிருக்கிறார்களா ? இந்த ஐந்து வருஷத்திற்கு ஒரு தரம் என்னென்ன தேவை என்பதை அனுசரித்து ஒதுக்குவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The premises of the hon. Member is wrong.

MR. SPEAKER : Questions 53 and 60-A will be taken up together.

Medical Colleges Selection Committee

* 53 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the names of the members of the Selection Committee for admission to the Government Medical Colleges this year; and

(*b*) whether any of the members belong to the backward classes or scheduled castes?

[1st November 1957

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) *Pre-professional Course*—

Dr. A. Sreenivasulu Naidu—*Chairman*.

Dr. B. M. Sundaravadanan.
Dr. R. G. Krishnan. } *Members*.

I M.B.B.S. Course—

Major-General S. C. Alagappan—*Chairman*.

Srimathi Maragatham Chandrasekar.
Dr. R. G. Krishnan. } *Members*.

(*b*) Srimathi Maragatham Chandrasekar belongs to the Scheduled Caste. None of the members belongs to the Backward Classes.

Admission to Medical Colleges

* 60-A *Q*.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of candidates admitted into the Government Medical Colleges in 1957;

(*b*) the number of students belonging to Backward Classes and Scheduled Castes who got admission through reservation; and

(*c*) the number of Backward Class students who were admitted by open competition?

THE HON. SRI M. A. MANICKAVELU :

(*a*) I M.B.B.S. Course	346
Pre-professional course	344
(*b*) I M.B.B.S.—	
Scheduled Castes	41
Backward Classes	75
Pre-professional—	
Scheduled Castes	22
Backward Classes	88
(*c*) I M.B.B.S.	63
Pre-professional	79

SRI A. GOVINDASAMY : கிராமங்களில் குறிப்பாக மேஜர் பஞ்சாயத்து கிராமங்களில் மெடிகல் கல்லூரியில் பட்டம் பெற்ற டாக்டர்கள் உள்ள ஆஸ்பத்திரிகள் அங்கு இல்லாமல் இருக்கிறது. இந்தக் குறையை நிவர்த்திப்பதற்கு ஒரு மெடிகல் கல்லூரியை நிறுவ அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது மூன்று கல்லூரிகள் இருக்கின்றன. நான்காவது கல்லூரி Integrated கல்லூரி ல் ஒன்று இருக்கிறது. இன்னொரு கல்லூரி தஞ்சையில் ஆரம்பிக்கப்போவதாக இருக்கிறோம்.

SRI A. A. RASHEED : Sir, what is the number of lady students? Is the Hon. Minister aware that lady doctors once they get married give up the profession and, therefore, is it not a waste of public money to give them this education?